இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 54 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 18 – சனிக்கிழமை 04 அக்டோபர் 2025 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 54 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 18 - Saturday 04 October 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## இராமநாதபுரத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்!

**இராமநாதபுரம், அக்.4 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 55 ஆயிரம் பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கள ஆய்வு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கியும், புதிய திட்டங்களை தொடங்கி வைத்தும் வருகிறார்.

தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்கள் மக்களை சென்றடைவதை கண்காணிக்கும் முறையிலும், கட்சி நிர்வாகிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும் இந்த சுற்றுப் பயணத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

அந்த வகையில் கடந்த மாதம் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு பயணம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையே கரூரில் த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் நடைபெற்ற துயர சம்பவம் காரணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இராமநாதபுரம் மாவட்ட சுற்றுப்பயணம் மற்றும் ரோடு ஷோ உள்ளிட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.

வேறொரு தேதியில் அந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2ந் தேதியன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை சென்று அங்கிருந்து சாலை மார்க்கமாக இராமநாதபுரம் சென்றார். அன்று இரவு அரசு விருந்தினர் மாளிகையில் தங்கினார்.

3ந் தேதி அன்று காலை இராமநாதபுரத்தையடுத்த பேராவூர் அருகே அமைந்து உள்ள புல்லங்குடி பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்றார். அங்கு 55 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் முடிவுற்ற நலத்திட்ட பணிகளை தொடங்கி வைத்ததுடன் புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் அமைச்சர்கள் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர், கழக முன்னணியினர், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.10.2025 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98–வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கவிப்பேரரசு வைரமுத்து, சிவாஜி கணேசன் அவர்களின் மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# உத்தமர் காந்தியடிகளின் 157-வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

**சென்னை, அக். 4 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தமர் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் நாள் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் 157–வது பிறந்த நாளான 2.10.2025 அன்று காலை 9.30 மணியளவில் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உத்தமர் காந்தியடிகள் 1869–ஆம் ஆண்டு அக்டோபர் 2–ஆம் நாள் போர்ப்பந்தரில் பிறந்தார். தமது 18–ஆம் வயதில் பள்ளிப்படிப்பை முடித்து, சட்டப் படிப்பை இங்கிலாந்து சென்று முடித்தார். கோபாலகிருஷ்ண கோகலே, ரவீந்திரநாத் தாகூர் போன்றோருடன் ஏற்பட்ட நட்பால் மகாத்மா காந்தியடிகள் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஒரு வழக்கில் வாதாட ஆப்பிரிக்கா சென்ற காந்தியடிகள் அங்கு இந்தியர்களுக்கு ஆங்கிலேய அரசு இழைத்த கொடுமைகளை எதிர்த்துப் போராடினார். இதன் தொடர்ச்சியாக, காந்தியடிகள் இந்தியா திரும்பியபின், இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவில், ஆங்கிலேய அரசு இந்தியர்களால் தயாரிக்கப்படும் உப்புக்கு வரி விதித்ததைக் கண்டித்து அகமதாபாத்திலிருந்து குஜராத் கடலோரத்திலிருந்த தண்டி நோக்கி நீண்ட நடைபயணத்தை தொடர்ந்தார். தண்டி கடற்கரை வந்து உப்பினைத் தயாரித்து, ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பொதுமக்களுக்கு உப்பு விநியோகம் செய்தார். இந்நிகழ்வு "உப்பு சத்தியாகிரகம்" என்று அழைக்கப்படுகிறது.

உத்தமர் காந்தியடிகள் 1921 ஆம் ஆண்டு மதுரைக்கு வருகை புரிந்த போது, பெரும்பாலான மக்கள் போதிய ஆடையின்றி வேட்டி துண்டு அணிந்திருப்பதைக் கண்டார். அதனைக் கண்டு வருந்திய உத்தமர் காந்தியடிகள் அன்று முதல் தம் ஆடம்பர உடைகளைத் துறந்து, எளிமையான கதர் ஆடைகளை அணியத் தொடங்கியதோடு, தமது இறுதி நாள் வரை கதர் ஆடைகளை மட்டுமே அணிந்து வந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கியமாக வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் உத்தமர் காந்தியடிகள் பங்கேற்றுப் பெரும் பங்கு வகித்தார். காந்தியடிகளுக்கு "மகாத்மா" எனும் பட்டத்தை கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் வழங்கினார்.

அண்ணல் காந்தியடிகள் வலிமையான ஆயுதங்கள் கொண்டிருந்த ஆங்கிலேயர்களை எதிர்த்து அஹிம்சை வழியில் போராடி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர் என்பதால், இந்தியாவின் "தேசத் தந்தை காந்தியடிகள்" எனப் போற்றப்படுகிறார்.

தமிழ்நாடு அரசால் உத்தமர் காந்தியடிகளின் தியாகத்தைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் சென்னை, கிண்டி மற்றும் கன்னியாகுமரியில் காந்தி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

உத்தமர் காந்தியடிகளின் புகழுக்குப், பெருமை சேர்க்கும் வகையில், 15.8.2022 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச்சிலையை நிறுவித் திறந்து வைத்தார்கள்.

இந்த ஆண்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற உத்தமர் காந்தியடிகளின் 157ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்கள், காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்.

அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பா.ஜ.க., சித்து விளையாட்டைத் தொடங்கிவிட்டது!

# சங் பரிவார்களின் சதி வலையில் சிக்கிய விஜய்!

## தொல்.திருமாவளவன் எம்.பி. அறிக்கை!

**சென்னை, அக்.4-**

**"சங் பரிவார்களின் சதி வலையில் விஜய் சிக்கி உழல்வதையே உறுதிப்படுத்துகிறது" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து தொல்.திருமாவளவன் எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கடந்த செப் 27 இரவு 7.30 மணியளவில் கரூரில் நடந்த கொடூரம் நாட்டை உலுக்கிய பேரவலமாகும். 41 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த நிகழ்வை ஒருங்கிணைத்தவர்களின் பொறுப்பில்லாத போக்குகளால் நேர்ந்த பேரிடராகும்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டதனால் உயிர் பிழைத்துள்ளனர். தமிழ்நாடு அரசு, குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அதிவிரைவான நடவடிக்கைகளே உயிரிழந்தோரின் எண்ணிக்கை மென்மேலும்



பெருகாமல் தடுக்கப்பட்டன.

அந்த பெருந்துயரம் குறித்து தகவலறிந்த உடனே மின்னல் வேகத்தில் இயங்கி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை களமிறக்கிவிட்டு மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தியதோடு சில மணி நேர இடைவெளியில் தனி விமானம் பிடித்து நள்ளிரவு வேளையில் கரூருக்குச் சென்று அங்கே கதறியழுத மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மற்றவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டார். இதனை நாட்டுமக்கள் நன்கறிவர்.

ஆனால், இன்று விஜய் அவர்கள் வெளியிட்டுள்ள காணொளி பதிவில் அவர் முதல்வர் மீது பழிசுமத்தும் வகையில் பேசியிருப்பது அவரது அரசியல் நேர்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அவர்மீதான பரிவுணர்ச்சியும் வீண் என்று எண்ணிட வைத்துள்ளது.

### பெருந்துயர்க்கு வருந்துவதாகத் தெரியவில்லை!

நடந்த பெருந்துயரத்திற்காக அவர் வருந்துவதாகத் தெரியவில்லை. பத்துமணி நேரமாகத் தன்னைக் காணும் பேராவலோடு காத்திருந்தவர்கள், அடியெடுத்து வைப்பதற்கும் இடமில்லாத அளவுக்கு ஏற்பட்ட கடும் நெரிசலில் சிக்கிக் கொண்டவர்கள் அதிலிருந்து வெளியேறிவிடவேண்டும்; தம்மைத் தற்காத்துக் கொள்ளவேண்டும் என்கிற பதைப்பில் ஒருவருக்கொருவர் நெட்டித் தள்ளி, ஏறிமிதித்துத் தப்பிக்க முயன்ற நிலையில்தான், இந்தப் பேரவலம் நடந்தேறியது என்கிற உண்மையை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

### அம்பலப்பட்டு நிற்கும் விஜய்!

ஒருவேளை உணர்ந்திருந்தாலும் அதனை வேண்டுமென்றே திட்டமிட்டே மறைத்து திசை திருப்ப முயற்சிக்கிறார் என்பதிலிருந்து அவர் இந்த உயிர்ப்பலிகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. இதன்மூலம் அவர் அம்பலப்பட்டு நிற்கிறார்.

அந்த உயிர்ப்பலிகள் திடுமென வன்முறை வெடித்ததால் நேர்ந்த கொடூரமா? அல்லது நெடுநேர நெரிசலால் அங்கே குவிந்திருந்தவர்கள் நா வறட்சிக்குள்ளாகி, மிதிபாடுகளில் நசுங்கி மூச்சுத்திணறலுக்கு ஆட்பட்டதால் நேர்ந்த பேரவலமா? அவை "நெரிசல் சாவுகள் தான்" என்பது பாதிக்கப்பட்ட தொண்டர்களின் குடும்பத்தினரும் நாட்டுமக்களும் கண்கண்ட பேருண்மை ஆகும்.

### பா.ஜ.க.வின் கருவி!

ஆனால், இது வெளிப்புறத்திலிருந்து யாரோ தூண்டிவிட்டதனால் அரங்கேறியது என்கிற தவறான கருத்துருவாக்கத்தை உருவாக்கிப் பாதிப்படைந்த மக்களை மீண்டும் ஒரு மாயைக்குள் வீழ்த்திட விஜய் தரப்பினர் முயற்சிக்கின்றனர். இதிலிருந்து விஜய் அவர்களுக்குத் தவறான வழிகாட்டுதலையும் தி.மு.க.வுக்கு எதிரான வெறுப்பு அரசியலைப் போதிப்பதையும் துணிந்து செய்பவர்களின் கோரப்பிடியில் அவர் சிக்கியுள்ளார் என்றே உணரமுடிகிறது. அவர் இதனை உணர்ந்திட முயற்சிக்கவில்லை என்றால், இவர் மற்றவர்களின் கைக் கருவியாக முடங்கும் நிலையே உருவாகும்.

'பா.ஜ.க. சொல்வதையே விஜய்யும் சொல்கிறார் என்று பா.ஜ.க. மேலிடம் அனுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவைச் சார்ந்த அனுராக் தாகூர் அவர்கள் கூறுவதிலிருந்தே, அவர் யார் பிடியில் சிக்கி உழலுகிறார் என்பதை அறியமுடிகிறது.

பா.ஜ.க. உண்மை அறியும் குழுவை அமைத்திருப்பதிலிருந்தும், தி.மு.க. அரசுக்கு எதிராக இச்சூழலை மடைமாற்றம் செய்ய முயற்சிப்பதிலிருந்தும், தமிழ் நாட்டை அவர்கள் குறிவைத்து வெளிப்படையாகவே தங்களின் சித்து விளையாட்டைத் தொடங்கிவிட்டார்கள் என்பதையும்; விஜய் அவர்கள், 'பா.ஜ.க.வினரின் கருவி தான் என்பதையும் உறுதிப்படுத்துகின்றனர்.

### தமிழ்நாட்டு மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

இந்நிலையில், தமிழ்நாட்டு மக்கள் இத்தகு சக்திகளிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறிப்பாக, வட இந்திய மாநிலங்களில் காட்டிய அரசியல் சூதுசூழ்ச்சி போன்ற கைவரிசைகளையெல்லாம் தமிழ்நாட்டிலும் செய்து காட்ட முயற்சிக்கும் சங்பரிவார்களிடம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது, அவர்களின் அரசியல் சதிகளை முறியடிக்க அனைத்துத் தரப்பு சனநாயக சக்திகளும் ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.